முருகப்பெருமான் துணை

**மகான் முனையடுவார் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.03.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. மக்களை தேற்றி ஞானிகளாக
   மாற்றம் செய்திட கலியினில்
   ஆக்கம் தந்து அருளும் வண்ணம்
   ஆறுமுகனாராக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது சேல் திங்கள்
   வரங்களென வியதிகதி கதிர்வாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் **12** ம் நாள், **26.03.2023**, ஞாயிற்றுக்கிழமை)
   வழங்குவேன் முனையடுவார் நாயனார் யானும்
3. யானும் அனுகூல ஆசிதனை
   உலகநலம்பெற உரைப்பேன்
   ஞானமாக அரங்கன் தருகின்ற
   நன்னெறியை மக்கள் ஏற்றிட
4. ஏற்றிட அவரவர்க்கு உள்ளாக
   இயம்பிடுவேன் கருணை வடிவில்
   ஆற்றல் பெருகி சேவை மிகுந்து
   அரங்கமகான் தேர்வு செய்யும்
5. செய்யும் ஞானவான்களாகத் தேறி
   செப்பிட சர்வ மாற்றமும்
   மெய் ஞானம்பட அடைந்து
   மேலான வாழ்வு நலம் அடைவர்
6. அடையவே ஞானிகள் பூசையாக
   அரங்கன் தரும் பூசைமுறை
   தடையற நாளும் செய்துவர
   தரும வேலியெனும் அன்னதான
7. அன்னதான சேவை கலந்து
   அனுதினம் வழங்கும் சக்தியும்
   அன்னதான சேவை வளரவே
   ஆற்றல்பட உதவி வருக
8. வருகவே மாற்றம் உலகில்
   வரலாறு காணாத வண்ணம்
   தருமம் நிரம்பிய மாற்றமாக
   தன்னை காத்து தரணிமீட்கும்
9. மீட்கும் வகை தனிமனித
   மேலான சேவை வளர்ந்து
   திட்டமுடன் இணைந்து விரிந்து
   தெய்வ பலமாகச் சிறந்து

10. சிறந்து ஞானவான்கள் ஆளும்
சிறப்பான ஞான ஆட்சியாக
பரந்த உலகம் கண்டுத் தேறி
பாடிடுவேன் மாற்றம் காண்கும்
11. காண்கவே அரங்கமகானின்
கட்டளையாக ஏற்றுத் தொடர
உண்மை ஆன்மீக அரசியல்
உலகம் உயர்களம் கண்டுத் தேறும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—